பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி - சென்னை - 4

12 09 2025 6 45

வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் 15வது குடியரசு துணைத்தலைவராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பதவியேற்கிறார்.
- கையெழுத்துப் பிரதிகளை டிஜிட்டல்மயமாக்குவது தொடர்பான சர்வதேச மாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று உரையாற்றுகிறார்.
- மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.
- திமுக ஆட்சியில் காவல் துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக பிஜேபி கூறியுள்ளது.
- ஆசிய கேடட் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் 15-வது குடியரசு துணைத்தலைவராக திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று பதவியேற்கிறார்.

குடியரசுத்தலைவர் மாளிகையில் காலை 10 மணிக்கு நடைபெறும் விழாவில் அவருக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவுள்ளனர்.

பதவியேற்பு விழாவுக்குப் பின்னர் திரு சி.பி. ராதாகிருஷ்ணன், மாநிலங்களவையில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கையெழுத்துப் பிரதிகளை டிஜிட்டல் மயமாக்குவது தொடர்பான ஞான பாரதம் இயக்கத்தின் சர்வதேச மாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று மாலை உரையாற்றுகிறார்.

புதுதில்லியில் நேற்று தொடங்கி 3 நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் 'கையெழுத்துப் பிரதிகளின் வாயிலாக இந்தியாவின் அறிவுசார் மரபை மீட்டெடுத்தல்' என்ற கருப்பொருளில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

இத்துறை சார்ந்த அறிஞர்களும் தொழில்நுட்ப வல்லுநர்களும் பங்கேற்கும் இம்மாநாட்டில் அரிய கையெழுத்துப் பிரதிகளின் கண்காட்சியும் நடைபெறுகிறது.

இன்றைய நிகழ்ச்சியில் ஞான பாரதம் டிஜிட்டல் தளத்தை பிரதமர் திரு நரேந்தி மோடி தொடங்கி வைக்கவுள்ளார்.

<<<<>>>>

விரைவான குடியேற்ற சேவைகள் மூலம் பயணிகளின் வசதியை மேம்படுத்த மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

திருச்சி உள்ளிட்ட 5 விமான நிலையங்களில் விரைவான குடியேற்ற அனுமதி திட்டத்தை காணொலி மூலம் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

பயணிகளின் வசதியையும், சிறந்த அனுபவத்தையும் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது உள்நாட்டுப் பாதுகாப்பை அதிகரிக்கவும் உதவும் என்று அவர் தெரிவித்தார்.

தற்போது இத்திட்டம் நாடு முழுவதும் 13 விமான நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக திரு. அமித் ஷா கூறினார்.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இளையோர் அதிக ஆர்வம் செலுத்தி நாட்டின் முன்னேற்றத்திற்கு பங்காற்ற வேண்டும் என்று மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மேக்வால் கூறியுள்ளார்.

கோவையில் தனியார் கல்வி நிறுவனத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் பேசிய அவர், இந்தியாவில் தொழில் வளர்ச்சி சிறப்பாக நடைபெற்று வருவதாகவும் தெரிவித்தார்.

கல்வி நிறுவனங்கள் நாட்டின் முன்னேற்றத்திலும், மக்கள் நலனிலும் முக்கிய பங்காற்றுவதாகவும் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் மக்களைத் தேடி மருத்துவத் திட்டத்தின் மூலம் இதுவரை இரண்டரை கோடி பேர் பயனடைந்தள்ளதாக மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், மருத்துவத் துறையில் நாட்டிலேயே முன்னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று தெரிவித்தார்.

இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ் இதுவரை நான்கு லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்துள்ளதாக திரு. மா. சுப்பிரமணியன் கூறினார்.

<<<<>>>>

மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க திமுக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

தாராபுரத்தில் நேற்று பிரச்சாரம் மேற்கொண்டு பேசிய அவர், ஆட்சிப் பொறுப்பேற்று நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு உங்களுடன் ஸ்டாலின் என்ற பெயரில் குறைகளைக் கேட்பதாக திமுக அரசு கூறுவது மக்களை ஏமாற்றும் செயல் என்று கூறினார்.

இந்த முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் ஆற்றில் கண்டெடுக்கப்பட்டதே இது ஒரு விளம்பர நடவடிக்கை என்பதை உணர்த்துவதாக அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சியில் தாராபுரம் பகுதியில் இரண்டாம் கட்ட கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்பட்டதாகவும், அமராவதி ஆற்றில் 6 இடங்களில் தடுப்பணை கட்டப்பட்டதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

<<<<>>>>

திமுக ஆட்சியில் காவல்துறையினருக்கே பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், கடந்த நான்காண்டுகளில் காவல்துறையினர் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

குற்றவாளிகளுக்கு பயம் இல்லாத சூழல் ஏற்பட்டுள்ளதாகவும் பொதுமக்களுக்கு காவல்துறை மீது நம்பிக்கை இல்லாத நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

காவல்துறையினர் எவ்வித சமரசமுமின்றி மக்கள் பணியாற்ற திமுக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள டால்ஃபின் நோஸ் காட்சி முனைப் பகுதி இன்று முதல் மூடப்படும் என்று வனத்துறை அறிவித்துள்ளது.

பராமரிப்பு பணிகள் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

*<u>இருவரிச் செய்திகள்</u>*

யூத புத்தாண்டையொட்டி யுக்ரைனின் உமானுக்குப் பயணிக்கும் யாத்ரீகர்களின் பாதுகாப்புக்காக கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக இஸ்ரேலும்-யுக்ரைனும் அறிவித்துள்ளன.

<<<<>>>>

பட்னாவில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி ஆணைய அலுவலகத்தை மத்திய வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் திறந்து வைத்தார்.

<<<<>>>>

ராஞ்சியில் உள்ள சி.சி.எல். நிலக்கரி நிறுவனத்தின் ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தை மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி திறந்து வைத்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் பயணம் மேற்கொண்டுள்ள குவாஹாத்தி பல்கலைக்கழக மாணவர்களுடன் ஆளுநர் திரு ஆர்.என். ரவி கலந்துரையாடினார்.

<<<<>>>>

நாகை மாவட்டம் ஆயக்காரன்புலம் கிராமத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி பவள விழாவில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் அரசு மற்றும் தனியார் தொழில் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 30-ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து திருவண்ணாமலையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு. தீபக் ஜேக்கப் ஆய்வு மேற்கொண்டார்.

<<<<>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டம் திருக்கோவிலூரில் புதிய பேருந்து நிலைய கட்டுமான பணிகளை மாவட்ட ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

ஈரோட்டில் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்துக்கு சீல் வைத்த மாநகராட்சி அதிகாரிகள் 5 டன் பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்தனர்.

<<<<>>>>

கட்டுமானப் பணிகள் காரணமாக வரும் 15-ம் தேதி முதல் 19-ம் தேதி வரை பச்சை வழித்தட சேவைகளில் மாற்றம் செய்யப்படுவதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

சென்னை தண்டையார்பேட்டை தொற்றுநோய் மருத்துவமனையில் ஆய்வக தொழில்நுட்பப் பட்டயப் படிப்பில் சேர்வதற்கான விண்ணப்பங்களை வரும் 15-ம் தேதி முதல் 22-ம் தேதி வரை நேரில் பெறலாம் என மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முரு.-ஹா -34

12 09 25 6 45 Sports-1

ஆசிய கேடட் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

இந்தோனேஷியாவின் ஜகார்தாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் 44 கிலோ எடை பிரிவில் Rahi Ghelani தங்கப் பதக்கம் வென்றார்.

மகளிர் 40 கிலோ எடைப் பிரிவில் நிகிதாவும், ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் ஆருஷ் தத்தாவும் வெண்கலப் பதக்கம் வென்றனர்.

<<<<>>>>

இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் பிரஜ்வல் தேவ் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 7-6, 6-0 என்ற செட் கணக்கில் போர்ச்சுகலின் Joao Graca-வை வென்றார்.

<<<<>>>>

12 09 25 6 45 Sports-2

உலக சீனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Poonam Tatwawadi காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 21-15 என்ற செட் கணக்கில் கனடாவின் Joyce Pittman-ஐ வென்றார்.

<<<<>>>>

பிரான்சில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ருதுஜா போஸ்லே - பிரிட்டனின் Naiktha Bains இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<<<<>>>>